# ஜி.எஸ்.டி., குறைப்பில் பாரபட்சம்
# அட்டை பெட்டி தயாரிப்பாளர்கள் புகார்

**கொல்கட்டா, செப். 21–**

சமீபத்திய ஜி.எஸ்.டி., மாற்றங்களால், தங்கள் தொழிலுக்கு கடுமையான பாதிப்பு ஏற்பட்டு உள்ளதாக கிழக்கு இந்திய அட்டை பெட்டி தயாரிப்பாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக, கிழக்கு இந்திய அட்டை பெட்டி தயாரிப்பாளர்கள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளதாவது:

ஜி.எஸ்.டி., சீர்திருத்தத்துக்கு பின், அட்டை பெட்டிகளுக்கான வரி 12 சதவீதத்தில் இருந்து 5 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. ஆனால், இதற்கான மூலப்பொருட்களான கிராப்ட் பேப்பர் மற்றும் போர்டு ஆகியவற்றின் மீதான வரி, 12 சதவீதத்தில் இருந்து 18 சதவீதமாக உயர்த்தப்பட்டு உள்ளது.

இந்த முரண்பாடு, அட்டை பெட்டி தயாரிப்பு நிறுவனங்களுக்கு 12 சதவீத கூடுதல் நிதிச்சுமையை ஏற்படுத்தியுள்ளது. இது சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்கு பதிலாக, அவற்றின் இருப்புக்கே அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

இந்த தொழிலில், 10 லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் பணியாற்றி வருகின்றனர். ஆண்டுதோறும் 70 லட்சம் டன் கிராப்ட் பேப்பர், அட்டை பெட்டிகளாக தயாரிக்கப்படுகின்றன.

மூலப்பொருட்களை வாங்கும்போதே அதிக வரி செலுத்துவதால், உள்ளீட்டு வரி பயன் தேக்கம் அதிகரிக்கும். இதனால், நிறுவனங்களின் பணப்புழக்கம் பாதிக்கப்படும்.

ஒப்பந்த தொழிலாளர், வாடகை, பழுதுபார்ப்பு போன்ற செலவுகள் 18 சதவீதம் வரையிலும், சரக்கு போக்குவரத்து செலவு 5 சதவீதம் வரையிலும் அதிகரிக்கும். அட்டை பெட்டிகளின் விலை 5 முதல் 7 சதவீதம் வரை அதிகரித்து, நுகர்வோர் தான் பாதிக்கப்படுவர்.

அட்டை பெட்டிகள் மற்றும் இதன் மூலப்பொருட்களுக்கான ஜி.எஸ்.டி., சதவீதத்தை சமநிலைப்படுத்த வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# Cardboard box manufacturers complain of discrimination in GST reduction

Kolkata, Sept. 21-
The East India Cardboard Box Manufacturers Association has said that their industry has been severely affected by the recent GST changes.

In this regard, a statement issued by the East India Cardboard Box Manufacturers Association states:

After the GST reform, the tax on cardboard boxes has been reduced from 12 percent to 1 percent. However, the current raw materials such as kraft paper and board have been

The tax on has been increased from 12 percent to 18 percent.

This discrepancy has caused an additional financial burden of 12 percent for cardboard box manufacturers. Instead of supporting the growth of small, micro, and medium enterprises, this has threatened their very existence.

More than 1 million people are employed in this industry. 7 million tons of kraft paper and cardboard are produced annually.

More when purchasing raw materials

Due to the payment of taxes, the internal tax revenue will increase. This will affect the liquidity of the companies.

Costs such as contract labor, rent, and repairs will increase by up to 18 percent, and freight costs by up to 10 percent. The price of cardboard boxes will increase by 5 to 10 percent, and consumers will be affected.

We demand that the GST percentage for cardboard boxes and its raw materials be balanced.

It has been reported.

Translated with Google Lens